# ஆடு பலியிடுதலின் விளைவு; சிறுவனுக்கு கத்திவெட்டு!

விளையாட்டுக்காக ஆட்டுக் கடாவாக நடித்த சிறுவனொரு வன வெட்டுக்காயத்துடன் அஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார் அளவெ... ஆலய மொன்றில் இடம் பெறற அடுகள் வெட்டும் வேள்வி யைப்பார்த்து ரசித்த சிறுவர் கள் வீடு வந்து தாமும் அது போல் விளையாடினர்கள்

ஒரு சிறுவன் ஆட்டுக் கடா வாகவும் இருவர் தலையிலும் காலிலும் பிடிப்பவர்களாகவும் ஒருவர் வெட்டுபவராகவும் விளையாடினர்கள்.

ஆடுவெட்டும் சிறுவன் நிஜக்கத்தி யொன்றினல் ஓங்கி வெட்டிய பொழுது ஆட்டுக் கடாச்சிறுவன் வெட்டப்பட் டான்.

இச்சம்பவத்தை அறிந்த உறவினர்கள் காயமடைந்த சிறுவனை தெல்லிப்பழை ஆஸ் பத்திரிக்கு கொண்டு சென்று சிகிச்சையளித்தார்கள்.

ஆடு பலியிடும் சைவ ஆல யங்களுக்கும், கோயில் நிர் வாகிகளுக்கும் இது சமர்ப் பணம்.


# அறவழி
NONVIOLENCE

அறம் 2 ★ வழி 23 ★ 1989 ஆடி ★ மாத இதழ் ★ பக்கம் 8 ★ விலை 3-00



மாநகராட்சி மன்றம்
2966 Lib
1-AUG-1989
அணையாளர்
Nallur Branch Library


# 31 வருடத்தில் 28 யுத்தம்; 2950000 மக்கள் மரணம்!

## யுத்தத்தில் பங்குபற்றிய இராணுவத்தினரில் 1463000 வீரர் உயிர் இழப்பு!

**ஆபிரிக்கா கண்டத்தை உள்ளிட்ட நாடுகளில் 1957ம் அண்டு முதல் 1988ம் ஆண்டு வரையிலான, 31 வருடங்களில் இருபத்தெட்டு யுத்தங்கள் நடந்துமுடிந்துள்ளன என்ற தகவல் தற்போது தெரியவந்துள்ளது.**

– சிறப்புச் செய்தியாளர் –

அங்கோலா, புருண்டி, கம ரோன், காட், எத்தியோப் பியா, கானு, மொசாம்பிக், நைஜீரியா,ருவண்டா,சூடான், உகண்டா, மேற்கு சகாரா, சயர், ஸாம்பியா, அல்ஜீரியா, தென் ஆபிரிக்கா போலற நாடு களில் இடம்பெற்ற யுத்தங் களின் காரணமாக, 2950000 மக்கள் உயிர் இறந்துள்ளனர்


அத்துடன் இவ்யுத்தங்களில் ஈடுபட்ட தன் காரணமாக 1463000 இராணுவ வீரர்க ளும் உயிர் இழந்திருக்கின்றனர்

## உலகில் இராணுவத்தில் இரண்டு கோடி சிறுவர்கள்

உலகில் சுமார் இரண்டு கோடி எண்ணிக்கையுள்ள சிறுவர்கள் இராணுவ வீரர் களாகக் கடமையாற்றி வரு கின்றனர். உலகில் சிறுவர்களை இராணுவமயப் படுத்தல் மூலம் வெளிப்படும் பிரச்சனைகள் பற்றிய ஆர்வினை மேற் கொண்ட சமாதான இயக்கம் இத் திடுக்கிடும் தகவலை அண்மையில் வெளிப்படுத்தி யுள்ளது.

நடந்து முடிந்த ஈரான் - ஈராக்கிய போரின் போது 12 வயதுக்கும் 15 வயதுக்கு மிடையிலான சுமார் 50,000 ஈரானிய சிறுவர்கள் கொல் லப்பட்டனர்.

## அறவழி மகளிர் பயிற்சி பயிலுனர்கள்




மகளிர்பயிற்சியில் கலந்து கொண்ட பயிலுனர்களுடன் செயலாளர் க ஜீவகதாஸ், இயக்குனர் ச.தங்கராசா, ஆலோசகர் க. கோபால கிருஷ்ணன் ஆகியோரும் காணப் படுகின்றனர்

## அறவழியாளர் ஜோதிபாய் தேசாய் விசாரணையில்

சர்வதேச தோழமை இணக்க இயக்கத்தின் இந்தி யக் கிளையின் உறுப்பினராகிய திரு. ஜோதிபாய் தேசாய், உட்பட 17 உறுப்பினர்கள் குஜராத் அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

குஜராத்தில், அரசு ஒரு பெரிய அணைக்கட்டைக் கட்டு வதை ஆட்சேபித்த சமயத் தில் தான் இவர்கள் கை தானனர்.

கட்டப்படும் அணைக்கட் டால் சூழல் மாசுபடும் என் பதாலேயே இவர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இவர்களுக்கான மேல் விசாரணை நடைபெற்று வரு கின்றது.

திரு. ஜோதிபாய் தேசாய், மகாத்மா காந்தியின் சுதந் திரப் போராட்டத்தில் காந்தி யுடன் இணைந்து செயல்பட்ட ஓர் அறவழியாளர் ஆவார்.

## குசினிப்பாத்திரங்கள் வழங்கப்பட்டன

வன்செயலால் பாதிக்கப் பட்டு குடும்பத்தலைவர்களை இழந்த சுமார் 50 இளம் விதவைகளுக்கான மறுவாழ் வுத்திட்ட உதவிகளை அறவழிப் போராட்டக்குழு கடந்த 29-ம் திகதி பணிமனையில் வைத்து வழங்கியது.

இவ்வைபவத்தில் குழு இயக் குனர்கள் பங்குகொண்டிருந்த னர்.

## த. வி. கூட்டணித் தலைவர்களுக்கு அறவழிக்குழு அஞ்சலி

"ஈழத்தமிழரின் நல் வாழ் வுக்காக உழைத்து வந்த தமி ழர் விடுதலைக் கூட்டணித் தலை வர்களான அ. அமிர்தலிங்கம், வெ. யோகேஸ்வரன் ஆகியோ ரின திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்" என்று அறவழிப் போராட்டக் குழு விடுத்துள்ள அஞ்சலி அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- "ஈழத்துக்காந்தி தந்தை செல்வா காட்டிய பாதையில் அறவழி ரீதியில் கடந்த நாற்ப தாண்டு காலமாக அரசியல்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

### அறமுரசு

உலகத்திலேயே மிகவும் மலிவான பொருள் அன்புதான். அது தன்னைப் பெறுபவனுக்கும், வழங்குபவனுக்கும் அதிகமான இன்பத்தை வழங்கும்.

— இங்கர்சால்.

## அறநோக்கு

### அச்சமில்லை! அச்சமில்லை!!

இந்திய தேசத்தின் சுதந்திர போராட்ட காலத்தின்போது, இந்திய மக்கள் மத்தியில் குடிகொண்டிருந்த அச்ச உணர்வைக் கண்டு பாரதியார் வேதனைப்பட்டார். நாட்டில் அச்ச உணர்வுகளுக்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டும், என எண்ணி, ''அச்சமில்லை அச்சமில்லை-அச்சம் என்பது இல்லையே'' என்ற எழுச்சிக் கீதத்தைப் பாடினார்'

இக்கீதம் மக்கள் மத்தியில் அச்சஉணர்வை இல்லாமல் செய்வதற்குப் பெரிதும் உதவியது. மக்களின் மனங்களில் பலம்-வீரம்-உறுதிப்பாடு-தன்னம்பிக்கை-வெற்றிச்சிந்தனைகள் உருவாகின.

முன்னேறத்துடிக்கும் மனிதனை அல்லது சமுதாயத்தை அச்ச உணர்வு எனும் நோய் பீடித்துக் கொள்ளுமாகில், அதில் இருந்து விடுவித்துக்கொள்வது என்பது கஸ்டமான காரியமாகிவிடும்.

வாழ்வில் அச்சம் தவிர்த்து வாழ்வது மிக முக்கியமாகும். இன்று எம்மத்தியில் அச்ச உணர்வலைகள் பல்கிப் பெருகியுள்ளன. எங்கு நோக்கிலும் அச்சம்! தான்.

அச்ச உணர்வலைகள் ஏற்படுத்தும் தாக்கங்கள் காரணமாக மக்கள் மத்தியில் துன்பம்-துயரம்-வெறுப்பு போன்றறை உருவெடுத்து வாழ்வினை நரகமாக்கிக் கொள்கின்றன.

மக்கள் மத்தியில் அச்சத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தும் நோக்குடன் ஒரு சில தகவல் தொடர்பு சாதனங்கள் போட்டி போட்டுக் கொண்டு செயல்பட்டு வருவது வேதனைதருவதாகவுள்ளது. மக்களின் நல்வாழ்வில் சிறிதளவேனும் அக்கறை இன்றி, லாபமொன்றையே நோக்காகக் கொண்டு செயற்படும் இச்சாதனங்கள் சமுதாயத்திற்கு நன்மை, பயன் செய்வதாகக்கருதிக் கொண்டு - செயல்படும் விதம் கவலைக்குரியதாகும்.

மாற்றங்காணத்துடிக்கும் தமிழ் சமுதாயத்தில் அச்ச உணர்வினை முதலில் இல்லாமல் செய்தல் மிகமுக்கியமான பணி என்பதை '' அறவழி '' கோடிட்டுக்காட்ட விரும்புகின்றது.

எம் மக்களிடம் குடிகொண்டிருக்கும் அச்ச உணர்வுகளைப் போக்கி அவர்கள் வாழ்வில் நம்பிக்கையையும் - ஒளியையும் ஏற்றி ''அச்சமில்லை! அச்சமில்லை!!'' என்னும் எழுச்சிக் கீதம் எப்போது சமுதாயத்தில் விசுவாச உணர்வுடன் இசைக்கப்படக்கூடுமோ அன்றுதான் எம் மக்களுக்கு விடியல் தோன்றும்.

# பிரச்சனைகளுக்கு முடிவெடுக்கும் திறனை வளருங்கள்

- ஜீவகன்

மனித வாழ்வில் ஏற்படுகின்ற பிரச்சனைகளோ பலவிதம். பிரச்சனைகள் தோன்றும் போது அவற்றிற்கு சரியான முடிவுகளைக் காண்கின்ற திறனை, வாழ்வில் முன்னேறத் துடிப்பவர்கள் அவசியம் வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

பிரச்சனைகளுக்கு உடனுக்குடன் சரியான தீர்வுகளை கண்டறிய முடியாதவர்கள், அப்பிரச்சனைகளின் தாக்கத்தினுல் தமது தன்னம்பிக்கையை இழந்து, வாழ்வில் பிடிப்பற்று, விரக்தியைத் தழுவி, கோபத்தை வளர்த்து வெறுப்பை ஏற்படுத்தி, ஈற்றில் தற்கொலை கூடச் செய்து கொள்கின்றனர்கள்.

வாழ்க்கையில் எதிர்ப்படும் எதிர்ப்புக்களைத் தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் சமாளியுங்கள். உங்களை நோக்கும் பிரச்சனைகள் அனைத்தையும் சவால்களாக ஏற்றுக் கொள்ளுங்கள். அந்தச் சவால்களை எதிர்கொண்டு சென்று தீர்வு காண முனையுங்கள்.

வாழ்வில் ஏற்படும் ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் ஒவ்வொரு தீர்வு உண்டு என நம்புங்கள்.

பிரச்சனைகள் தோன்றும் போது உங்கள் மனம் குழம்பிய நிலையில் இருக்கும். கோபம், வெறுப்பு, நின்மதியின்மை தோன்றும். மனம் கொந்தளிக்கும். உடம்பு படபடக்கும் கவலை கொள்ளாதீர்கள். மனத்தை அமைதிப் படுத்துங்கள்.

உங்கள் மனம் குழம்பிய நிலையில் உங்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண அவசரம் கொள்ளாதீர்கள்.

மனதை அமைதிப்படுத்திய பின்பே உங்கள் பிரச்சனை பற்றி நன்கு அலசி ஆராய்ந்து, மதிர்தீர்க்கமான முடிவெடுங்கள். பிரச்சனையைக் கண்டு ஓடிவிடாதீர்கள்.

பிரச்சனைகள் எதிர் கொள்ளும்போது அவற்றுக்கான தீர்வுகளைக் காண 'நாளை நாளை'' எனப் பின்போடாதீர்கள். பிரச்சனைகளை ஆறப் போட்டுவிட்டால் அதன் தாக்கம் குறைந்துவிடும் எனச் சிலர் கூறுவதுண்டு.

இதுசரியானதல்ல. பிரச்சனைகளைப் ற்றித்தீர ஆலோசித்து, நல்ல முடிவுகளை எடுத்துச் செயல்பட வேண்டும்.

பிரச்சனைகள் தோன்றும் போது அவற்றுக்குரிய முடிவுகளைக் காண்பது என்பது ஒரு திறன். அத்திறனை நீங்கள் சரியாக வளர்த்துக் கொண்டால், வாழ்க்கை எனும் பயணத்தில் நீங்கள் வெற்றி நடைபோடமுடியும்.

# அன்பென்னும் நியதி

அன்பின் சக்தி என்பது ஆன்ம சக்தி அல்லது சத்தியமேதான். அது செயல்படுவதை அடிக்கடி பார்க்கிறோம். அச்சக்தி இல்லையேல் உலகமே நிலைக்காது.

ஆயிரக்கணக்கான, ஏன் லட்சக்கணக்கானவர், இச் சக்தி தீவிரமாக இயங்குவதையே நம்பியிருக்கிறார்கள் இச் சக்தி காரணமாக லட்சக்கணக்கான குடும்பங்களில் தினமும் மூளும் சண்டை, பூசல்கள் நீங்குகின்றன.

நூற்றுக்கணக்கான நாடுகள் இனவகள், அமைதியாய் வாழ்கின்றன. வரலாற்றிற்கு இவை பற்றி அக்கறை இல்லை.

அன்பு அல்லது ஆத்ம சக்தியின் வழியில் அவ்வப்போது தோன்றும் இடையூறுகளின் விவரமே வரலாறெனப்படுகிறது.

இரண்டு சகோதரர்கள் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். பிறகு ஒருவன் மனத்தில் அன்பு தலையெடுக அவன் கழிவிரக்கம் கொள்ளுகிறான். பிறகு இருவரும் சமாதானமாய் வாழத் தொடங்குகிறார்கள். ஆனால் எவரும் அதைக் கவனிப்பதேயில்லை.

ஆனால் இருசகோதரர்களும் சண்டை பிடித்துக்கொண்டு நின்று வக்கில் உதவியுடன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தாலோ, இதுவும் மிருக பலத்தில் ஒருவகையே.

அவர்கள் விவகாரம் உடனே பத்திரிகைகளில் வெளியாகும். அண்டை அயலாரெல்லாம் அதைப்பற்றியே பேசுவர் வரலாற்றிலும் அது இடம் பெற்றுவிடும்.

குடும்பங்களில் நடப்பது போல் தான் நாடுகளிடையேயும். இனங்களுக்கிடையேயும் நடக்கிறது. குடும்பங்களில் நடப்பது வேறு. நாடுகளிடையே நடப்பது வேறென்று எண்ணக்காரணமே இல்லை.

எனவே உலகின் இயல்பான போக்கு தடைப்படுகையில் அது பற்றிப் பேசுவதே வரலாற்றின் வேலையாயிருக்கிறது. ஆன்மசக்தி இயல்பானதாயிருப்பதால் அதுபற்றி வரலாறு ஒன்றுமே சொல்லுவதில்லை.

(இந்திய சுயராஜ்யம்)

### அன்புடன் தொடர்வோம் அறவழி

அன்பும் பண்பும் அறவழி
அகிம்சையின் தோற்றம் அதன்வழி
சத்தியம் நேர்மை அறவழி
சாந்தி கிடைக்கும் அதன்வழி!

உத்தமன் காந்தியின் ஒரேவழி!
ஒற்றுமையுணர்வு அறவழி
தத்துவம் காட்டும் சமவழி
தாரணி போற்றும் அறவழி!

குழந்தைகள் நோக்கம் அறவழி; நற்
குணங்கள் தோன்றும் நல்வழி
செழிக்கும் தர்மம் அதன்வழி!
சிந்தை மகிழும் சீர்வழி!

தொண்டுகள், சேவையின் தனிவழி
தொடரும் சேவைகள் பலவழி
ஆண்டு தொடரும் அறவழி
அன்புடன் தொடர்வோம் அதன்வழி!

— இராஜி சண்முகநாதன் —

★ பணி செய் பலனை எதிர்பாராதே ★

# ஆத்மிகமும் அதன் அனுபவமும்

மனிதனால் படைக்கப்பட்ட எந்த பொருளும் நிலையானது அல்ல இவை யாவும் அழியக் கூடியன நம் உடலும் உடலும் ஒரு நாள் மண்ணோடு மண்ணாகப் போகக்கூடியதே. இவற்றை அறிந்தும் தன்னிலை உணராது தற்பெருமை அடித்துக்கொள்வதினால் என்ன பயன்?

பெருமை

நான் படித்தவன் (ள்) பட்டம் பெற்றவன் (ள்) அவன் பணக்காரன் (ரி) அவனிடம் (ளி) அதிக சொத்து இருக்கிறது என்று பலவாறு பெருமை அடித்துக்கொள்கிறோம், இதனால் என்ன பயன்? ஆனால் இவை யாவும் நிலையானதா? என்று சிந்தித்துப் பாருங்கள்.

எல்லாம் முடிந்த பின் ஒரு பிடி சாம்பல்தான் மிஞ்சும் ஆனால் நம் ஆத்மா மட்டும் அழியாது. புதிய உடலில் புகுந்து வாழ்க்கையை மீண்டும் தொடர்கிறது.

நாம் எல்லோரும் காலத்திற்கு ஏற்றவாறு நடித்து முடித்த பின் வேஷம் கலைந்து மாற்று வேஷம் போடுகிறோம். இதுதான் படைப்பின் ரகசியம்.

இது சிலருக்குப் புரியாத புதிராக இருக்கலாம். இப்பிறவியில் நாம் நல்லவராக பிறந்திருக்கலாம். ஆனால் மறுபிறவியில் எத்தகையவராகப் பிறப்போம் என்பது புரியாத புதிர்.

மனிதன் செய்யும் காரியங்கள் எல்லாம் மனதிலே ஒளி நாடாவைப்போல பதியவைத்திருந்தானேயானால் அவன் பிறவியில் தவறு செய்ய அஞ்சுவான். ஆனால் அதனை யாராலும் புரிந்துகொள்ளாதபடி ஆட்சிசெய்துகொண்டிருப்பவன் ஆண்டவன். எல்லாம் வல்ல இறைவனைப் புரிந்துகொண்டால் நாம் தவறு செய்ய அஞ்சுவோம்.

வினைப் பயன்

ஒருவன் வாழ்க்கையில் பல இன்னல்கள் அடைகிறான் துன்பம் அடைகிறான் ஆனால் அது அவனுக்கு கிடைத்த தண்டனை என்று எள்ளி நகையாடுவார், அது தவறு அது ஏதோ தவறு செய்ததால் ஆண்டவன் கொடுத்த தண்டனை என்று பறை சாற்றுவர். குறையும் கூறுவர், மனிதனைப் படைத்த ஆண்டவன் ஏன் நமக்கு தண்டனைகொடுக்க வேண்டும் அவர் யாரையும் தண்டிக்கமாட்டார். நாம் செய்த வினைப்பயனை நாம் தானே அனுபவிக்கவேண்டும்.

எடுத்துக்காட்டுக்கு ஒரு மா விதையையோ அல்லது பலா விதையையோ பூமியில் இட்டு, மண்ணால் மூடி, தண்ணீர் இட்டு அரும்பாடுபட்டு, பாதுகாத்து பூச்சிபுழு அணுகாமல் அனுதினமும் கண்ணும் கருத்துமாய் வளர்க்கிறோம். பின் செடி, மரமாகி, கிளையிட்டு கொம்பேறி, வித்திட்டு காயாகி பழமாகி கண்டபின் அதனை ஆசையோடு பறித்து சாப்பிட ஆரம்பிக்கிறோம்.

நாம் கனியைச் சுவைத்துச் சாப்பிடும்போது தாம் அதனை வளர்த்த விதத்தையும் பட்ட துன்பங்களையும் பலரிடம் கூறி பெருமைப்பட்டுகொள்கிறோம் இதைத்தான் 'பிரதிபலன்' என்று கூறுகிறோம். ஆனால் மரமோ எந்த பிரதிபலன் பாராது நமக்குநல்ல கனியை அளித்து நம்மை மகிழ்விக்கிறது. அதைத்தான் ஆண்டவனின் மகிமை என்று கூறலாம்.

அதே நேரம் ஒரு தீமை பயக்கும் வினைகளை செய்து மற்றவர்களுக்கு துன்பங்களை விளைவித்து அவர்களின் துன்பங்களைச் சொல்லி எள்ளி நகையாடி, சந்தோஷம் பட்டுக்கொண்டிருக்கலாம். இதனால் இவ்வாறு பலதடவை செய்துகொண்டே இருப்பவர்கள் ஒருநாள் சுவர்மீது எறிந்த பந்து திரும்ப நம்மிடம் வருவதுபோல, நாம் நம்நிலையில் இருந்து தீவினை என்ன என்டதை உணர்கிறோம் இதனை தீவினையின் பிரதிபலன் என்று கூறலாம். விதைவிதைப்பவன் விதை அறுப்பான். வினைவிதைப்பவன் வினையே அறுப்பான.

ஆனால் இதனை உணராத சிலர் ஆண்டவனை நிந்தனை செய்கின்றனர் ஆண்டவன் நல்லதையே கொடுத்துகொண்டிருந்தால் அவர் நல்லவர் என்று கூறுகிறோம். திடீர் என்று துன்பம் வந்துவிட்டால் அவரை கையெடுத்துக் கும்பிடுவதை மகா பாவம் என்று கூறுகிறோம. நரம்பில்லா நாக்கு எப்படி எல்லாமோ பேசச் செய்கிறது.

மன அடக்கம்:

காரணம் மனிதன் உணர்ச்சி வசப்பட்டவன் அவன் மனம் அடக்கப் பழகிக் கொண்டால் எல்லாம் தாமே தெரிந்துவிடும். மன அடக்கம் நிறைந்தவைகளை யாராலும் அசைக்க முடியாது

புத்தர் வயோதிகன், நோயாளி, மரணம் இவற்றைக் காணாது இருந்திருந்தால் இன்று பௌத்த மதம் தோன்றியிருக்காது. ஏசு அன்று சிலுவையில் அறையப்படாது இருந்திருந்தால் இன்று கிறிஸ்தவ மதம் இருந்திருக்காது. முகம்மது நபிகள் நாயகம் குகைக்குச் செல்லாதிருந்தால் இன்று திருக்குர்ஆன் தோன்றியிருக்காது.

உலகில் தோன்றிய எல்லா சமயத் தலைவர்களும் கூறுவது உன் அன்பான மனதை ஆண்டவரிடம்கொடு. அவர் உனக்கு அன்பும் அமைதியும் சுபீட்சமும் தருவார் என்பதுதான்.

ஆனால் இதனை சிலர் உணராது உலகமக்களில் உட்கார்ந்து அனுதினமும் சும்மா இருப்பதினால் ஆண்டவன் கையில் வந்து கொடுத்துவிடுவார் என்பது தவறு. இந்த யுகத்தில் மானிடப் பிறவி எடுத்தகற்கு நாம் மாதவம் செய்திருக்க வேண்டும் ஆண்டவன் நல்ல உணர்ச்சியுள்ள உடலில் தோற்றத்தைக் கொடுத்து தெளிவான அறிவையும் படைத்து கை கால் வளத்தையும் கொடுத்து உழைத்து வாழும்படி வழி வகுத்துக் கொடுத்து விட்டார் நாம் தாம் அவற்றை நல்ல வழியில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கவியரசு கண்ணதாசன் அமைதியாக அழகான செந்தமிழில் மிகவும் தெளிவாக விளங்கும்படி இவ்வாறு கூறினார். பூஜியத்திற்குள்ளே ஒரு ராஜியத்தை ஆண்டு கொண்டு புரியாமலே இருப்பான் ஒருவன். அவனை புரிந்துகொண்டால் அவன் தான் இறைவன் என்று இச்சொற் சுவையை கேட்கும் போதே நம் உடல் புல்லரிக்கிறது. உண்மையில் நாம் இறைவனிடம் தஞ்சமடைந்துவிட்டால் பேரின்பம் அடையலாம

இதைவிட வேறு பேரின்பம் என்ன இருக்கிறது?

ஆகையால் உங்களின் ஒருவராக ஆண்டவரின் தொண்டராக தாழ்மையுடன் கேட்கிறேன். சாதி, பேதம் விட்டு அவரவர் இன மதக்கொள்கைளை ஒழுங்குடன் பின்பற்றி மற்றவர்கள் மனம் புண்படாமல எடுத்துரைத்து உள்ளம் நோகா சொற்களைக்கூறி மதம் மாறி கொலையுடு வாழ்வதே சிறந்ததாகும்.

பக்தியுடு மதம் உயர்வு தாழ்வு பாராமல் எல்லா இன மக்களையும் மதித்து நடந்து ஒருவரை ஒருவர் புரிந்து நடந்து இன ஒற்றுமை கருதி நாடு அமைதியுடன் வாழ ஆண்டவனை வழிபடுங்கள். இதுதான் நாம் எல்லாம் வல்ல இறைவனுக்கு ஆற்றும் தொண்டு

நன்றி தமிழ்முரசு சிங்கப்பூர்

## பெண்களுக்கு

அடக்கம் இருக்கவேண்டும்; ஆனால் அசடாக இருக்கக் கூடாது. புத்தி இருக்கவேண்டும்; அகம்பாக்கிரித்தனம் இருக்கக்கூடாது. அழகு இருக்க வேண்டும்; ஆளை மயக்கும் கும நோக்கம் இருக்கக்கூடாது. படிப்பு இருக்கவேண்டும்; ஆனால் படாடோபம் இருக்கக் கூடாது. —அறிஞர் அண்ணா

# இவர்கள் எத்தகையவர்கள்?

★ பெண்கள் தங்கள் கைப் பையையோ அல்லது பர்சையோ இரு கைகளாலும் மார்போடு அணைத்துப்பிடித்துக்கொண்டிருந்தால் உள்ளுக்குள் ஒரு போராட்டம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்று பொருள் உங்களுடன் சகஜமாகப் பேசிக்கொண்டிருப்பது போலத்தான் தெரியும். நீங்கள் சீக்கிரம் போய் விட்டால் நல்லது என்று நினைப்பார்கள்.

★ கையை அகட்டிச் சுவரில் வைத்துக்கொண்டு நிற்பவர்கள் உங்களை முதல் சந்திக்கின்ற போதே பயமுறுத்திப் பணியவைக்க முயல்கிறார் என்று பொருள் கவனமாக இருங்கள்.

★ ஒருவர் பேசும்போது தன் இரண்டு உள்ளங்கைகளையும் விரித்தபடி பேசினால் அவர் மனதிருந்து உண்மையைப் பேசுகிறார் என்று பொருள்.

★ பெருவிரலால் மோவாயை தாங்கிக்கொண்டு இரண்டு விரல்கள் கன்னத்தில் பிடித்திருக்குமானால் நீங்கள் பேசுகின்ற பேச்சில் அவருக்கு நம்பிக்கை இல்லையென்பது பொருள். அவருக்கு நம்பிக்கை வரும்படி பேசுங்கள்.

★ இரு கைகளையும் தலைக்குப் பின்னால் கோர்த்துக்கொண்டு நாற்காலியிலுள்ளவர்களை கவனித்தால் தன்னம்பிக்கை மிக்கவர்கள். எனக்கா தெரியாது என்னிடமா சொல்லுகின்றாய் என்று மனதுக்குள் நினைத்தபடி என்று பொருள்.

★ சிகரெட் பிடிப்பவர்கள் புகையை மேல்நோக்கிவிட்டால் தன்னைப் பற்றித்தானே உயர்வாக நினைப்பவர்கள். செயற்திறமை உள்ளவர்கள். கீழ்நோக்கிப் புகையை விட்டால் சந்தேகப் பிராணி மனதுக்குள் ரகசியம் வைத்திருப்பவர் என்று பொருள்.

★ மூக்குக் கண்ணாடியின் நுனியை பல் நுனியால் ருஷித்துக்கொண்டிருந்தால் எந்தப் பிரச்சினையையும் லேசில் முடிவெடுக்கமாட்டார். விரைவில் முடிவெடுக்கப் போவதில்லை என்று பொருள். கண்ணாடியை பாலிஸ் போட்டுக்கொண்டிருப்பதும் [illegible] அர்த்தம் [illegible].

(ஆலன் பீஸ் எழுதிய "பாடி லாங் வேஜ்" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது)

## தனித்து நின்று..

எந்தப் பெரிய காரியத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள் அதைச் சாதிப்பதற்கு எத்தனை பேர் முன்வருகிறார்கள் என்பது முக்கியமல்ல. எத்தகைய உள்ளன்பு வாய்ந்தவர்கள் முன்வருகிறார்கள் என்பதே இறுதியில் வெற்றியை நிர்ணயிக்கும் அம்சமாகும் உலகத்தில் மகத்தான காரியங்களைச் சாதித்த பெரியார்கள் அனைவரும் எப்போதும் தனித்து நின்றே போராடியிருக்கிறார்கள்.

* *

## குழந்தைகளுடன் அன்பாகப் பேசுங்கள்

குழந்தைகளுக்கு, மென்மையான ஊக்கப்படுத்தும் வார்த்தைகள் தேவை. தாய்மார்கள் தங்கள் குழந்தைகளிடம் கனிவும், அன்பும் ததும்பும் வார்த்தைகளைப் பேசுவது அவ்வளவு கடினமான காரியமல்லவே! இதனால் குழந்தைகளின் இதயங்கள் கதிரொளியைக் கண்டவைபோல் மலர்ந்து, தங்களுடைய எத்தனையோ தொல்லைகளை மறந்து சிரிக்கக்கூடும்.

## எழுபது கிராமங்களில் அறவழிப் பணி

அறவழிப் போராட்டக்குழு மேலும் முப்பது பாடசாலைகளை தனது திட்டத்தில் இணைத்து எழுபது கிராமங்களில் தனது சமூகப் பணியை இந்த வருடத்திலிருந்து ஆரம்பித்துள்ளது

கிளிநொச்சி, முல்லைத்தீவு மன்னார் மாவட்டங்களிலே இவ்வருடம் புதிய பாடசாலைகள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன

புதிய பாடசாலைகளில் கற்பித்துக்கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கு பாலர் ஆசிரியர் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்குவதற்கான ஏற்பாடுகளை கல்விப் பகுதி இயக்குனர் ச. தங்கராசா மேற்கொண்டு வருகிறார்.

இந்தப் பாடசாலைகள் இயங்குவதற்கான வசதிகளை வெளிநாடுகளிலுள்ள தமிழர்களும், மற்றும் பொது நிறுவனங்களும் செய்வதற்கு அறவழிப் போராட்டக்குழு முயற்சி எடுத்துள்ளது.

## சில துளிகள்

★ உக்கிரமாக [illegible]மாசப் படுத்தி பொல்லாத வழியாய் நடக்கிறவன் தான் வெட்டின குழியில் தானே விழுவான். உத்தமர்களோ நன்மையைச் சுதந்தரிப்பார்கள். —விவிலியம்.

★ நான் உங்களுக்கு சொல்லுகிறேன் உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். —விவிலியம்

★ உன்னைப் போலவே பிறரையும் நேசி ★

# தமிழ் சுருக்கெழுத்தின் தந்தை

# அமரர் சி. இராமலிங்கம்

—வ. சிவசந்திரதேவன்

தெல்லிப்பளை தையிட்டிப் புலம் கிராமத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட இராமலிங்கம் அவர்கள் பன்னாலை சேர் கனக சபை வித்தியாசாலையில் தமது கல்வியைக் கற்று பின்னர் தமிழகம் சென்று சிதம்பரம், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் தமிழ் சுருக்கெழுத்து - தட்டச்சுக்கலைகளைப் பயின்றார். 1950ம் ஆண்டு சென்னை தொழில் நுட்ப இயக்கத்தால் நடாத்தப்பட்ட தமிழ் சுருக்கெழுத்துப் பரீட்சையிலும், தட்டெழுத்துப் பரீட்சையிலும் மேல் நிலையில் தேர்ச்சி பெற்று இலங்கை திரும்பினார்.

1951ம் ஆண்டு இலங்கை வானொலி நிலையத்தில் தமிழ்த் தட்டெழுத்தாளராகக் கடமையாற்றினார். 1952-ம் ஆண்டு முதல் 1959-ம் ஆண்டுவரை கொழும்பிலுள்ள அரச கரும மொழித் திணைக்களத்தில் தமிழ் சுருக்கெழுத்து தட்டச்சுப் போதனாசிரியராகக்கடமை புரிந்தார். இவரது ஆரம்ப கால மாணவர்கள் சிலர் தேசிய அரசுப் பேரவையில் அறிக்கையாளர் என்ற உயர் பதவியினைப் பெற்றமை ஆசிரியரது கற்பித்தல் திறமைக்கு ஓர் சிகரம் எனலாம்.

திரு. இராமலிங்கம் அவர்கள் தமிழகத்தில் திரு. சுப்பிரமணியம் என்பவரின் முறையிலான சுருக்கெழுத்தைப் பயின்றார். சங்கீதம், ஓவியம், சிற்பம் போன்று சுருக்கெழுத்தையும் ஓர் கலையாகவே கருதியவர். கற்பித்தலில் ஈடுபடத் தொடங்கிய பின்னர் தமது அனுபவங்களின் மூலம் வசதிக்கேற்றவாறு குறியீடுகளை மாற்றி மாணவர்களுக்கு சுருக்கெழுத்தைக் கற்பதற்கு இலகுவானதாக்கினார். இதன் பயனாக ஆசிரியரிடம் பயின்ற மாணவர்கள் பாதுப்பரீட்சைகளில் சிரமம் இன்றி சித்தியடைந்தார்கள் என்பதை எல்லோரும் அறிவர்.

தமது வாழ்க்கைத் துணையாக தம்மிடம் பயின்ற மாணவியாகிய வட்டுக்கோட்டை (அராலி)யைச் சேர்ந்த மகாலட்சுமி என்பவரைத் தேர்ந்தெடுத்தார். மகாலட்சுமி அம்மையாரும் சுருக்கெழுத்துக் கலையில் அதிக ஈடுபாடு உடையவராக இருந்ததால் ஆசிரியர் தமது சுருக்கெழுத்துக் கல்விப் பணியை மிகவும் சிறப்பாகச் செய்ய முடிந்தது எனலாம்.

அம்மையார் சுருக்கெழுத்துக் கலையில் கொண்ட ஆர்வம் காரணமாகப் பல ஆராய்ச்சிகள் செய்து 'தமிழ் ஒலியுருவச் சுருக்கெழுத்து, என்னும் நூலை வெளியிட்டு தமது கணவரிடம் சுருக்கெழுத்துப் பயிலும் மாணவருக்கு அக்கலையை இலகுவாகக் கற்பதற்கு ஊக்கம் அளித்தார்

1960ம் ஆண்டுமுதல் யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரியில் (முன்பு கொக்குவில் கனிஸ்ட தொழில் நுட்பக்கல்லூரி) சேவையில் இருந்து இளைப்பாறும் வரை தமிழ் சுருக்கெழுத்து — தட்டச்சுப் போதனாசிரியராகக் கடமையாற்றினார். இடைப்பட்ட காலத்தில் சுமார் 2 வருடங்கள் சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியிலும் கடமையாற்றினார்.

ஆசிரியர் தன்னம்பிக்கை, உற்சாகம், சேவை மனப்பான்மை ஆகிய குணங்களை ஒருங்கே அமையப் பெற்றவர். தமிழ் சுருக்கெழுத்துக் கலையை தமிழகத்தில் உருவாக்கியவர்கள், அதன் எதிர்காலம் இலங்கையில் கேள்விக்குறியாகஇருக்குமோ என ஐயமுற்றார்கள். காலம் சென்றவர்களான திரு வே. வா வேலுப்பிள்ளை (பருத்தித்துறை) திரு. முருகேசு (தெல்லிப்பளை), திரு. வை. சி. சிவஞானம் (வசாவிளான்) போன்ற அறிஞர்களும் வேற்று முறையிலான தமிழ் சுருக்கெழுத்துக் கலையை வளர்த்த போதிலும் ஆசிரியர் அவர்களின் சுருக்கெழுத்துமுறைக்கு அரச ஆதரவு இருந்ததன் காரணமாக அவரது முறையை மிகவும் கூடுதலானோர் அரச தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயின்றனர்.

'இராமர்' என்று செல்லமாக நண்பர்களால் அழைக்கப்படும் இராமலிங்கம் ஆசிரியர் அவர்கள் வகுப்பறையில் படிப்பிப்பதோடு, தம்மிடம், பயில்கின்ற மாணவர்களின் தனிப்பட்ட சொந்த விடயங்களைக் கூட அறிந்து வைத்து, அதற்கேற்ற வகையில் மாணவருக்குத் தேவையான உதவிகளைச் செய்வதோடு மட்டுமல்லாமல் நல். ஆலோசனைகளையும் வழங்கி வந்தமை ஏனைய ஆசிரியர்களுக்கு ஓர் முன்மாதிரியான செயலாகும்.

## எங்கே நான் போகிறேன்...,

— வீ. தர்மினி,

வாழ்வுதான் வாழ்க்கை
ஓ ........
அறுபத்தி மூன்றிலே
ஈன்றெடுத்தாள்- என் அன்னை
இருபத்தி ஆறு முடிவுறும்
இந்நாளிலே
எங்கே? நான் போகிறேன்
மதுவில் ஊறியவள்-நான்
மதுவிலே வளர்ந்தவள்- தான்
தொடர்கிறது- என்
பயணம்
பயணங்கள் முடிவதில்லை
பாதையிலே முட்கள்
எங்கே நான்
போவது.
ஆம்...
பூக்கள் வாடவில்லை
சேவையினை அறிந்தவள்தான்
செம்மையாகச்
செய்யவில்லை- ஏன்
இருட்டினிலே
வாழ்ந்தவள்- நான்
விடிவுகள் எனக்கில்லை
இருப்பதற்கு இடமின்றி
அலைகின்றேன்- இன்று
பார்ப்பவர்களுக்கு கேலியாய்
திரிகின்றேன்- பாரினிலே
தனிமைப் பிறவியிலே
எங்கே- நான்
போவது
சேற்றினிலே வளர்ந்தாலும்
செந்தாமரை போல்
வளர்கின்றேன்
முடிவான பாதை
தெரியாத வேளை
எங்கே நான்
போகிறேன்.
எங்கே நான் போவது.

# "வன்செயல்களினால் பெண்கள் நோயாளிகளாகின்றனர்"

— திருமதி சரோஜா சிவச்சந்திரன்
(இயக்குனர், மகளிர் அபிவிருத்தி நிலையம்)

"யாழ். குடா நாட்டிலுள்ள பல பெண்கள் உடல் உளரீதியாக பாதிக்கப் பட்டவர்களாக காணப்படுகிறார்கள்" என்று மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குனர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தெரிவித்தார்.

குடா நாட்டிலுள்ள பல கிராமங்களில் மகளிர் அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்குகளை நடத்தி மகளிருடைய நோக்கங்கள் எதிர்பார்ப்புகளை அறிந்து வைத்திருக்கும் திருமதி சரோஜா சிவச்சந்திரன் இங்குள்ள பெண்கள்பற்றி கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது.

### வன்செயலினால் பெண்கள் பாதிப்பு

1983-ம் ஆண்டிற்குப் பின்னர் நாட்டில் இடம் பெற்ற வன் முறைச்சம்பவங்களாலும் குடாநாட்டுப் பெண்கள் வெகுவாகப் பாதிக்கப் பட்டுள்ளனர்.

குடாநாட்டின் எல்லைக்குள் எந்தப்பெண்களைப் பார்த்தாலும் அவர்கள் நோயாளிகளாக இருப்பதனை அவதானிக்கலாம். பயம், ஏக்கம், பசியின்மை, நித்திரையின்மை, தலையிடி, மயக்கம் போன்றவையே கூடுதலாக இந்தப் பெண்களை பீடித்துள்ளது.

### நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும்

இந்தப் பெண்கள் பற்றி நாம் இன்றே சிந்தித்து ஒரு முடிவு எடுக்க வேண்டும் இல்லையெனில் இவர்களுடைய எதிர்காலம் கோள்விக்குறியாகி விடும் அமைப்பு ரீதியாக செயற்பட்டு வரும் மகளிர் அமைப்புக்கள், நிறுவனங்கள் இந்த விடயத்தில் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும்.

> **குடாநாட்டிலுள்ள எந்தப் பெண்களைப் பார்த்தலும் தலையிடி, மயக்கம், ஏக்கம் நித்திரையின்மை, பசியின்மை போன்ற வற்றல் பீடிக்கப்பட்டவர்களாகவே காணப் படுகிறார்கள்-**

உடல் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ள இந்தப்பெண்களை அணுகி சுயநம்பிக்கை ஏற்படுத்த வேண்டும்.

எமது மகளிர் அபிவிருத்தி நிலையம் இது வரை குடாநாட்டிற்குள் ஏழு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கருத்தரங்குகளை நடத்தியுள்ளதுடன் அமைப்புரீதியாகவும் பெண்களை அணிதிரட்டியுள்ளது. இவ்வாறு அணிதிரளும் பெண்கள், கூட்டம் ஒன்று சேர்வதினூடகத்தான் உருப்படியாக எதையாவது சாதிக்கலாம்.

நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களால் கணவனை இழந்து விதவையாகி நடுத்தெருவில் நிற்கும் பெண்களுக்கு மறு வாழ்வு ஏற்படுத்த வேண்டியதும் எமது தலையாய பணியாகும்.

### இனம்காணல்

எத்தனையோ பெண்களிடம் பலதிறமைகள் இருந்தும் அவை வெளிக் கொண்டு வரப்படுவதில்லை குறிப்பாக கிராமப்புறங்களிலே இருக்கின்ற பெண்களிடம் பல திறமைகள் இருக்கின்றன. இவற்றை இனங்கண்டு அவர்களின் திறமைகளுக்கேற்றதான சந்தர்ப்பம் வழங்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களைச் சொந்தக்காலில் நிற்கச் செய்யலாம் இவ்வாறு செய்வதினூடாகத்தான் பெண்களுடைய பிரச்சினையைத்தீர்க்க முடியும்.

### நிரந்தர வருமானம்

பல பொது அமைப்புக்கள் விதவைகளுக்கு ஐந்நூறு ரூபாவோ அல்லது ஆயிரம் ரூபா வழங்கி விட்டால் அவர்களின் பிரச்சினை தீர்ந்து விடும் என்று நினைக்கிறார்கள். இது தவறான ஒரு கருத்தாகும் விதவைகளுக்கு உதவி செய்பவர்கள் அவர்கள் தொடர்ந்து வாழ்வதற்கான வருமானச் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதாவது நிரந்தரமான ஒரு வருமானத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் மகளிர் அபிவிருத்தி நிலையம் இதனைச் செய்வது தான் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

அதற்காகத்தான் கிராமங்கள் தோறும் கருத்தரங்குகள் நடத்திக் கொண்டிருக்கிறோம் கருத்துக்களைக் கொடுத்து அவர்களை உள்வாங்கிய பின்னர் தான் எமது திட்டங்களை நடைமுறைப் படுத்துவோம்.

பெண்கள் மத்தியில் வேலை செய்கின்ற அமைப்புக்கள் யாவும் எமது கலாச்சாரத்தைப் பிரதிபலிக்க கூடிய வகையில் இயங்கவேண்டும். மேலை நாடுகளிலே இருக்கின்ற பெண்கள் அமைப்புக்களின் வேலைத் திட்டங்கள் எமது கலாச்சாரத்திற்கு ஏற்புடையதல்ல.

### நவீன தொழில் பயிற்சி

எமது பகுதி பெண்கள் தொடர்ந்தும் குறிக்கப்பட்ட தொழில் செய்யவர்களாக இருக்கிறார்கள் இதனால் தான் அவர்களுடைய வருமானம் போதுமானதாக இல்லை இதனை மாற்ற வேண்டுமெனில் நவீன தொழில் துறைகளில் பெண்களுக்குப் பயிற்சிகள் வழங்கப் படவேண்டும்.

### 'நங்கை' மாதர்மஞ்சரி

இலங்கையைப் பொறுத்தவரையில் குறிப்பாக தமிழர் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பெண்களுக் கென தனித்துவமான ஒரு பத்திரிகையோ, சஞ்சிகையோ இல்லை. இதனை நிவர்த்தி செய்வதற்காக மகளிர் அபிவிருத்தி நிலையம் 'நங்கை' என்னும் பெயரில் மாத சஞ்சிகை ஒன்றினை நடந்தவுள்ளது.

இச் சஞ்சிகை வெளியீட்டிற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. விரைவில் வெளிவரும்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் பெண்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. பெண்கள் தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளிற்கு தீர்வுகாண வேண்டுமெனில் சொந்தக்காலில் நிற்பதுடன் எல்லோரும் ஒன்று பட வேண்டும்.

★ "சட்டம் ஏமாந்து போனாலும் போகும் தர்மம் எப்போதும் பழிவாங்கித்தீரும்" ★

# குறை சொல்பவர்கள் பார்வையாளராக இல்லாமல் பங்காளராக மாறவேண்டும்

சுயநலமும் போட்டி பொறுமையும் அதிகரித்துவரும் இந்த மண்ணில் மரண பயத்தின் மத்தியிலும் மெழுகுதிரிகளாக உருகிப் பலர் தனித்துநின்றும், ஸ்தாபனங்களின் ஊடாகவும் சமுதாய வளர்ச்சிக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

சமுதாயப்பணி என்பது இன்றைய உலகில் எமது மண்ணைப் பொறுத்தவரையில் எல்லோராலும் இயலாத காரியம் என்பது அனுபவப்பட்டவர்களுக்குத்தான் தெரியும்.

சிலவேளைகளில் எமது உயிருக்கு உலைவைக்கும் நிலையைக்கூட இது ஏற்படுத்திவிடும்.

யாழ்ப்பாணத்திலுள்ள பின்தங்கிய கிராமங்களைப் பொறுத்தவரையில் பல சமூகப் பணியாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தமது கிராமங்களிலே நடைபெறுகின்ற அத்தனை சம்பவங்களிலும் தம்மை ஈடுபடுத்தி ஊருக்காக உழைத்து வருகிறார்கள் என்பது தெரிந்து இருந்தும்கூட அவர்களிடத்தில் குறைகளை ஏற்படுத்திக் குற்றம் காண்பதிலே பலர் தமது பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

எந்த ஒரு பெரிய காரியத்தை எடுத்துக்கொண்டாலும் அதற்குப் பின்னால் தனி நபருடைய செயற்பாடுகள் இருப்பதனை நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

சமுதாயத்திற்குத் தலைமை வகிப்பது என்பது பெரும் தலையிடியான செயல் என்பது அனுபவப்பட்டால்தான் தெரியும்.

ஏதாவதொரு காரியம் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்காதவர்கள் அல்லது பங்களிப்புச் செய்யாதவர்கள் அந்தக் காரியத்தில் சிறு தவறு நிகழ்ந்துவிட்டால் போதும் அதனைத் தட்டிக் கேட்பதற்கும் வெட்டிப் பேசுவதற்கும் முழு மூச்சாக நிற்பார்கள்.

ஒரு சமுதாயத்தில் நல்ல காரியம் நடக்கவேணுமென்றால் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது. சிலரிடம் குறை கேட்க வேண்டித்தான் ஏற்படும். அதாவது ஒருவர் சமூகவிரோத செயலில் ஈடுபடுகிறாரென்றால் அவருக்கு உரிய தண்டனை வழங்கவோ அல்லது கண்டிக்கவோ வேண்டும். இவ்வாறு செய்யும் பொழுது அவருக்காக வக்காலத்துக்கு வாங்கும் கூட்டம் குறை சொல்லிக்கொண்டேயிருக்கும்.

இப்படியான சந்தர்ப்பங்களில் எங்களில் பலர் சமூக விரோதிக்கும் துணைபோயும் திருத்த நிற்பவர்களின் பக்கம் சார்ந்து நின்றும் நான் நல்ல பிள்ளை ஒருவரோடும் பிரச்சினை இல்லை என்று நல்ல பிள்ளை வேடமிடுவார்கள்.

சமூக விரோதியிலும்பார்க்க மிகக் கொடுமையானவர்கள் இந்த நல்லபிள்ளை வேடதாரிகள் என்பதனை ஒரு சமூக சேவையாளன் நன்குணர வேண்டும்.

குறை சொல்பவர்களும் பார்வையாளர்களாக இல்லாமல் பங்காளராக மாறினால்தான் சமூகப்பணி செய்வதின் கஷ்டம் குறித்து உணரமுடியும்.

காய்க்கிற மரம்தான் கல்லெறி வேண்டுமென்பார்கள். அதுபோல ஒருவன தனது முயற்சியினால் முன்னுக்கு வந்து பிரபல்யமானவராகிவிட்டால் போதும் அவருக்குக் கல்லெறிவதற்குத்தான் பலர் காத்திருப்பார்கள்.

வியென் கேரி எம்

சிலபேருக்கு எந்த நேரமும் பிரச்சினைதான் அவர்கள வாழ்வில் எதிர் பார்த்த ஏதோ ஒன்று நிறைவேறாமையில் பிரச்சினைப் பட்டுக்கொண்டேயிருப்பார்கள்.

இவர்களுக்கு என்ன உதவி செய்தும் திருப்திப்படுத்த முடியாது அதாவது இவர்கள் உயிரோடு இருக்கும்வரைக்கும் திருப்தி என்பத இல்லாமல்தான் வாழ்வார்கள்.

சமுதாயப்பணி செய்பவர்களுக்கு உதவி செய்யமாட்டார் உபத்திரவப்படுத்திக் கொண்டேயிருப்பார்கள். ஆகவே இத்தகையவர்கள் இனம் காணப்படவேண்டியது சமூகப்பணி செய்பவர்களின் கடமையாகும்.

ஒரு சமூக நிலையமாக இருந்தாலென்ன அல்லது வேறு சமூக அபிவிருத்தி நிறுவனமாக இருந்தாலென்ன அதற்குப் பலரின் ஒத்துழைப்புத் தேவை என்பதனைச் சமுதாயத்தில் உள்ள அனைவரும் உணரவேண்டும்.

மேற்குறிப்பிட்ட சில அமைப்புக்களின் நடவடிக்கைகளைத் தனி நபர்களின் மீது சுமத்திவிட்டு அவர்களை வாட்டி வதைக்கும் நிலை எமது சமுதாயத்திலிருந்து அழியவேண்டும்.

குறை சொல்பவர்கள் முதலிலே தமது தவறுகளைப்பற்றி பின்னோக்கிப் பார்க்கவேண்டும், தவறுகள் செய்பவர்கள் எவரோ அவரே இன்னொருவரைப்பற்றிய குறைகளைச் சொல்லுபவர் என்ற உண்மையை அனைவரும் உணரவேண்டும்.

காகங்கள் கரைந்தும் நாய்கள் ஊளையிட்டும் ஒன்றும் ஆகப்போவதில்லை. எனவே சரியானவற்றினைச் செய்து நல்ல பணிகளை எமது சமுதாயத்திற்கு ஆற்றவேண்டியது சமூகப் பணிகளின் கடமையாகும்.

## சரஸ்வதி அறவழிப் பாடசாலை
## பெற்றோர்களும் பொது மக்களும் சத்துணவு வழங்கல்

கைதடி சரஸ்வதி அறவழிப் பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் சிறார்களுக்கு கடந்த இரு மாதங்களாக சத்துணவு வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இந்தப்பள்ளியில் பயிலும் பெறாரர்கள் ஆரம்பத்தில் சத்துணவு வழங்கி வந்தார்கள் பின்னர் இக்கிராமத்திலுள்ள பலர் தாமாகவே முன் வந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவர் என்ற வகையில் சத்துணவுவழங்கி வருகிறார்கள்.

இந்தப்பகுதியிலுள்ள மக்களின் சமூக உணர்வை பாராட்டியும், நன்றியும் தெரிவித்துள்ளார் மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்க தலைவர் திரு. ப செல்லத்துரை ஆசிரியர்கள்.

"ஒரு சமுதாயத்தின் எதிர்காலத்தலைவர்களின் வளர்ச்சிக்கு ஆக்க பூர்வமான உதவி வழங்கும் பெற்றோர்களுக்கும், ஏனையவர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் அதே வேளையில் இந்தப்பணி மேலும் தொடர ஒத்துழைப்பு வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார்.

# ஜனநாயகம் பற்றி காந்திஜி

காந்திஜி கருத்தில்கொண்ட ஜனநாயகத்தில் எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் இல்லை. சாதாரணமாக நாம் வழங்கும் பெரும்பான்மைப் பிரதிநிதித்துவம் என்பவற்றுக்கெல்லாம் இடமில்லை.

காந்திஜியின் ஜனநாயகம் சேவையையும், தியாகத்தையும் அடிப்படையாகக் கொண்டது. தார்மீக பலத்தையே அது செலுத்தும், "நான் ஒரு பிறவி ஜனநாயகவாதி" என்று அவர் உரிமை பாராட்டிப் பேசியுள்ளார்,

"மனிதவர்க்கத்தில் மிக மிகக் கீழான கட்டத்தில் உள்ள பாமர ஏழைகளுடன் ஒன்றுபட்டவன் என்ற முறையிலேயே நான் இந்த உரிமை பாராட்டுகிறேன். அவர்களைக் காட்டிலும் நன்றாக வாழ நான் விரும்பவில்லை. தன்னுடைய திறமையை எல்லாம் பயன்படுத்தி அந்த நிலையை அடைய மனப்பூர்வமாக ஒருவன் முயன்றால் இந்த உரிமை பாராட்டலாம். அதையே நான் செய்கிறேன் என்று அவர் கூறினார். ஜனநாயகத்தைப்பற்றி அவருடைய வியாக்கியானம் இதுதான்.

மேல்நாட்டு ஜனநாயகம் இப்போது சோதனைக் கட்டத்தில் இருக்கிறது. அது தோல்வியடைந்துவிட்டது என்றும் கூறலாம் ஆகவே உண்மையான ஜனநாயகத்தை நடைமுறையில் வெற்றியடையச் செய்து, ஜனநாயகத்தின் உண்மை இலக்கணம் இதுதான் என்பதை நாம் உலகிற்கு எடுத்துக் காட்டவேண்டும்.

"லஞ்சமும் பாசாங்கும் தான் இன்று ஜனநாயகத்தின் விளைவுகளாய் இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. ஆனால் அவை தவிர்க்கமுடியாதவையல்ல. அதேசமயம் மக்கள் எண்ணிக்கையைப் பெரிதாகக் காட்டுவதும் உண்மையான ஜனநாயகத்தின் அடையாளமாகாது. மக்களின் உணர்வு, நம்பிக்கை, அபிலாஷை ஆகியவைகளை ஒரு சிலர் பிரதிபலித்தால் அது ஜனநாயகத்திற்கு முரணானது அல்ல."

"கட்டாய முறைகளின் மூலம் ஜனநாயகத்தை உருவாக்கமுடியாது என்பது எனது கருத்து. வெளியில இருந்து ஜனநாயகத்தைப் புகுத்த முடியாது, உள்ளேயிருந்து அது வளர வேண்டும்' என்றும் காந்திஜி ஜனநாயகத்தை விளக்கியுள்ளார்

## அறவழி ஆய்வரங்கு ஒத்திவைப்பு

முன்னோடிகளால் கைதடியில் நடைபெறவிருந்த அறவழி ஆய்வரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக முன்னோடிகள் நிறுவுநர் தெரிவித்துள்ளார்.

இவ் ஆய்வரங்கு விரைவில் நடத்தப்படும் என்றும் ஏற்கனவே அழைப்பு அனுப்பப்பட்டவர்களுக்கு இது தொடர் ாக கடிதம் மூலம் தெரிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ரி. ஆர். ஆர். ஓ. கந்தசாமி மறைவு தமிழ் மக்களுக்கு பேரிழப்பாகும்

—திருமதி சரோஜா சிவச்சந்திரன்

"கந்தசாமி மனித உறவுகளைப் பேணி வந்தவர் அதனால் தான் மனிதர்களின் வளர்ச்சிக்காக பல நிறுவனங்களை ஆரம்பித்தார் என்று மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குனர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் கூறினார்.

திரு. எஸ். ரெட்ணராஜா தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ரி. ஆர். ஆர். ஓ. கந்தசாமியின் ஒருவருட நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

திருமதி சரோஜா சிவச்சந்திரன் மேலும் பேசுகையில் கூறியதாவது.

"கந்தசாமியினுடைய இழப்பு தமிழ் மக்களைப் பொறுத்தவரையில்பேரிழப்பு என்றுதான் சொல்ல வேண்டும். 1983–ம் ஆண்டிற்குப் பின்னர் எமது மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைப் போக்குவதற்காக அவர் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன.

அமரர் கந்தசாமி போன்று நேர்மையான, சுயசிந்தனையுள்ள நாணயமிக்க தலைவர்களை நாம் காண முடியாது. எந்த விடயத்திலும் தீர்க்கதரிசன முடிவெடுக்கும் திறனுடைய கந்தசாமியின் நேர்மையினால்தான் அவர் தன்னையே இழந்தார்.

நிறுவன ரீதியாக தமிழ் அமைப்புக்களை இயங்க வைத்த பெருமை அவரையே சாரும்."

இசை ஆசிரியர் திரு. மு. பொன்னம்பலம், நியூஎரா பப்ளிக்கேஷன் நிர்வாக ஆளுநர். எம். கனகராஜநயகம் உட்பட பலர் அமரர் கந்தசாமியின்நினைவலைகளை இக்கூட்டத்தில் மீட்டனர்.

★ பிறர் குறைகளை உன்முன் பேசுபவன் உன்குறைகளையும் பிறரிடம் கூறுவான் ★

## யாழ். மாவட்டத்தில் தொழில்நுட்ப

# கண்டுபிடிப்புகளின் கண்காட்சி

யாழ் மாவட்டத்தில் தொழில் நுணுக்க ரீதியிலான கண்டு பிடிப்பாளர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் அவர்களின் கண்டு பிடிப்பு முயற்சிகளை மக்கள் காணச் சந்தர்ப்பம் அளிக்குமுகமாகவும் கண்காட்சிகளை நடாத்தவும் இலங்கை பொறியியலாளர் நிறுவன யாழ்ப்பாணக்கிளை யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள தொழில் நுட்பப் பிரிவுடன் இணைந்துகண்காட்சியை நடாத்த முன்வந்துள்ளது.

கண்காட்சிக்கு வைக்கப்படும் கண்டுபிடிப்புக்களில் தரமானவற்றிற்குச் சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள், தொழிலகங்கள் அரச நிறுவனங்களில் கடமையாற்றும் ஆண் பெண் எந்த நிறுவனத்தினரும் தனிப்பட்டவரும் பங்கு பற்றலாம் நிறுவனங்களாகவும் பங்கு பற்றலாம்.

காட்சிப் பொருட்கள்;-

இலத்திரனியல், காந்தவியல், மின்சக்தி, சூரியசக்தி, காற்றுசக்தி, உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல், மூலவளங்களைப் பயன்பாட்டுக்கு கொண்டு வருதல் இயந்திரமனிதன். கம்யூட்டர், பொறியியல் போன்ற எந்தவொரு கல்விப்பரப்பிலும் தொழில் நுணுக்கங்களுக்கான கண்டுபிடிப்புகள் அமையலாம். காட்சிப் பொருட்கள் தனியார் முயற்சியாகவோ. குழு முயற்சியாகவோ அமையலாம். மேலும் காட்சிப் பொருட்கள் சிறிதாகவோ, பெரிதாகவோ இருக்கலாம்,கண்டு பிடிப்புக்கே முக்கியத்துவம் அளிக்கப்படும்.

இளஞ் சந்ததியினரிடையே தொழில் நுணுக்க ஆற்றல் விருத்தியடையும போதே நாட்டில் எல்லாத்துறைகளிலும் விருத்தி காணலாம். அறிமுறை அறிவைச் செயல்முறையில் பயன்படுத்தும் போதுதான் கல்வி முழுமையாகின்றது. எனும் கொள்கையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். பாடசாலை மாணவர்களிடையேயு , ஆசிரியர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள் ஆகியோருக்கும் கூட தமது திறமைகளை வெளிக்காட்டச் சந்தர்ப்பம் அளித்துள்ளது. இந்நிலையில் எமது பிரதேச வளர்ச்சியையும், தனியார் வளர்ச்சியையும் மனதில் கொண்டு கல்வித்திணைக்கள தொழில் நுட்ப பிரிவும் இத்திட்டத்தினை ஊக்குவிக்க முன்வந்துள்ளது

இக்கண்காட்சி 1989-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திற்கும் டிசம்பர் மாதத்திற்கும் இடையில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாணவர்களினதும் மற்றும் நிறுவனங்களினதும் ஊக்கத்திறகேற்ப ஒரு கிழமை அல்லது பத்து நாட்களுக்கு நடத்தப்படலாம். பாடசாலைகளின் பரீட்சை, மற்றும் வசதிகளையும் கருத்திற்கொண்டு விஞ்ஞான பொறியியல கண்காட்சியின் திகதி தீர்மானிக்கப்படும்

இவ்விஞ்ஞான பொறியியல் நிறுவனத்தின் உபதலைவரும் (Vice President) யாழ். பல்கலைக்கழகத்தின் உபவேந்தருமான (Vice Chancellor) பேராசிரியர் துரைராஜா அவர்களின் ஆலோசனையும் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது. யாழ் மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்(Deputy District of Educational) செல்வி. தி. பெரியதம்பி அவர்களின் அனுமதியும் தொழில் நுட்பக் கல்வி அதிகாரி ( Technical Educational Officer திரு சுப்பிரமணியம அவர்களின் முழு ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது. மேலும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்களும் ஒத்துழைப்பு அளிக்க முன் வந்துள்ளனர். மேலு இம் மாவட்டத்தில் உள்ள தொழில் நிறுவனங்களும் தொழிலகங்களும் இதில் பங்குபற்றுவதற்கு ஆர்வம் தெரிவித்துள்ளன

இலங்கை பொறியியல் நிறுவனம யாழ். மையம் (Tecl Jaffna Centre) பின்வரும் அங்கத்தினரைக் கொண்ட உப குழுவை தெரிவு செய்துள்ளது.

திரு எஸ். தயாபரன்
(யாழ். பல்கலைக்கழகம்)
திரு. எஸ். சுப்பிரமணியம்
(கல்வித்திணைக்களம்)
திரு. கே. அசோகராஜா
திரு ஏ. பி. இரவீந்திரன்
(தொழில்நுட்பக்கல் லூரி)

# இருள் அகல ஒளி பிறக்கும்

வெளிச்சத்தைத் தேடிச் செல்லவேண்டியதில்லை. இருள் அகல ஒளி பிறக்கும். இருளின் ஊடாக ஒளியைககாண இயலாது. அதேபோல இறைவனைத் தேடுகிறோம் என்று நாம் சொல்வதெல்லாம் வெறும் மருளே ஆகும்.

எல்லாவற்றிற்கும் முதல் குறிக்கோள் சரியாக இருக்க வேண்டுமென்பதையே யாவற்றிற்கும் முதன்மையாகக் கொள்ளல்வேண்டும். இருளுக்குக் காரணமாயிருக்கின்ற தடைகளையெல்லாம் நீக்கினால் இருள் தானுகவே அகலும்.

எனவே இருளை அகற்றுவதே எமது குறிக்கோளேயன்றி ஒளியைக் காண்பது எமது குறிக்கோளாக இருக்கக் கூடாது ஏனெனில் ஒளியைக் காண்பதற்காகத்தான் இருளை அகற்றுகிறோம் என்ருல் இங்கு அகற்றப்படுவது எதுவுமாகாது.

இருள், ஒளி என்ற இரு சொறகளையும் மாற்றி மாற்றி உபயோகிக்கும் வாக்கியம் கோவையாக இருமுடிவு ஏற்படக்கூடாது. இ பதில் அமையக்கூடாது

குழப்பம், அமைதியின்மை, துயரம் ஆகிய பேதமை இருள் மனத்திலிருந்து நீங்கிய பின்பே உண்மை புலப்படும். இதன் பொருட்டு உண்மையைத்தேடி அலையவேண்டிய அவசியம் இல்லை.

பேதமையும், மூடக்கொள்கையுமாகிய அக இருள் அகல, விவேகமும், அக ஒளியும் மலரும் மூடன் ஒருவன்தான் புத்திசாலியாக, விவேகமுள்ளவனுக வேண்டும் என்று முயன்ருல் அம்முயற்சியே அவனைப் பெரும் பேதை ஆக்கும்.

பேதமையை விவேகமாகவும் அறிவுடைமையாகவும் மாற்றமுடியாது. மடமை நீங்கும்போது விவேகம் உருவாகும்.

இவ்வாறே துயரம், குழப்பம், அமைதியின்மை ஆகியன முற்றுக நீங்கும்போதே உண்மை துலங்கும். ஒளிபிறக்கும்.

## உள் மனதின் காயங்கள் புலம்புகின்றன

என் இனிய நண்பர்களே,

உள் மனதின் காயங்கள் புலம்புகின்றன. தோல்விகளின் கனம் நெஞ்சை அழுத்துகிறது.

காற்றடிக்கும் இடத்தில் வைக்கப்பட்ட காகிதக்கட்டின் மீது—அது பறக்காமல் இருப்பதற்காக, கல்லைத் தூக்கி வைத்த பிறகும் காகிதங்கள் பறந்து காட்டுகின்றன.

ஆறுதல்கூறி அடக்க முயன்றதும் உள் மனதின் நான்கு புறங்களில் இருந்தும் உணர்ச்சிகள் பிரவகிக்கின்றன.

பிரக்ஞை இல்லாத மனிதனுக்கு இந்த வேதனைகள் இல்லை.

எனது தோல்விகளுக்கு நானே காரணம் என எண்ணும் துணிவும் இல்லை.

நண்பர்கள் தினமும் கைவிட்டுப் போய்க் கொண்டிருக்கிருர்கள்.

சக்தியற்ற பலவீனர்கள் மட்டுமே மிச்சமிருக்கிருர்கள்.

அவர்கள் எங்கும் போக முடியாத காரணத்தால் என்னுேடிருக்கிருர்கள்.

ஆறுதல் சொல்லவும் அவர்களுக்கு முடியவில்லை.

எனக்கு நானே சொல்லிக் கொள்ளும் ஆறுதலும் பலனளிக்கவில்லை.

அன்பான ஒரு மனைவி இருந்திருந்தால், இரவாவது இதமாக இருந்திருக்கும்.

இருண்ட உலகத்தில் இருந்து எனது அறையை மட்டும் தனிமைப்படுத்திக் காட்டும் இரண்டொரு மின்சார விளக்குகள் பளிச்சென்று எரிகின்றன.

அந்த ஒளி என் உள்ளத்தில் இல்லையே.

கடந்த காலங்களை நோக்கி நான் நடக்கிறேன்.

மக்கள் வெள்ளமும் மலர்மாலைகளுமாக வாழ்ந்த காலங்களை மீண்டும் படம் போட்டுப் பார்க்கிறேன்.

காலைக்காட்சியாக மட்டுமே ஓடும் பழைய படத்தைப் போல அந்தப்படமும் கொஞ்ச நேரமே ஓடுகிறது.

நான் ஏறிய படிக்கட்டுகள் உறுதியாகவே இருந்தன.

இது நம்முடைய படிதானே என்று அதில் விளக்கெண்ணையை ஊற்றி விட்டேன்.

அது என் கால்களையே வழுக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

உள் மனதின் காயங்களே புலம்புகின்றன.

சந்திர மண்டலம் போன கப்பல் கூட, வழியிலே பழுதாகி திரும்ப வந்துவிட்டது.

எனது கப்பலே திசை தெரியாமல் தடுமாறுகிறது.

ஏசுவைப் போலவும், புத்தனைப் போலவும், காந்தியைப் போலவும், உயர்ந்திருக்க வேண்டியவன் நான், முத்தனைப் போலவும், முனியனைப் போலவும் சுப்பனைப் போலவும் ஆக நேர்ந்துள்ளது.

எனது இராஜாங்கத்தின் படிக்கட்டுகளில் யார் யாரை எல்லாம் போட்டு மிதித்துக்கொண்டிருந்தேனே, அவர்களெல்லாம் இப்போது சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிருர்கள்.

என்ன இந்த ஜனங்கள்! கேவலமான ஜனங்கள்!

இவர்களை நான் உதைத்தது போல் யார் உதைத்தார்கன்?

இவர்களுக்கு நான் சேவை செய்ததுபோல் யார் சேவை செய்தார்கள்?

ஏன் என்னை இவர்கள் இப்படிப் புறக்கணித்தார்கள்?

அவர்கள் புறக்கணித்தார்கள் என்பது சரியா? அவர்களை விட்டு நான் வெகுதூரம் போய் விட்டேன் என்பது சரியா? நான் எங்கே போனேன்?

அடுத்த இராஜாங்கத்தில் கொஞ்சநேரம் இளைப்பாறினேன்!

அடுத்த இராஜா மக்களுக்கு விரோதி என்பதால் என்னை ஒதுக்குவான் ஏன?

நினைத்து நினைத்துப் பார்க்கிறேன்! உள் மனதின் காயங்கள் புலம்புகின்றன.

உயர்ந்து வரப் பல வருடங்கள் பிடிக்கின்றன

விழுந்து விடுவதற்கு இரண்டு மாதங்களே போதுமானவையாகவிருக்கின்றன.

பல மரங்கள் வெட்டிச் சாய்த்த என் கோடரி என் கழுத்தையும் வெட்டக்கூடியதுதான் என்பது எனக்கு முன்பே தெரியாமற் போய்விட்டது

என் கண்கள் நல்ல பாதையையே பார்த்தன. கால்கள் தான் எப்படியோ தடம் மாறிவிட்டன.

தடம் மாறியதாக நான் நினைக்கவில்லை. மற்றவர்கள் கூறுகிருர்கள்.

காலிலிருக்கும் காயங்கள் அது உண்மைதான் என்றும் கூறுகின்றன.

கண்ணுக்கு இருந்த புத்தி காலுக்க இருந்திருக்கக் கூடாதா?

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

★ உண்மை பேசி உத்தமனுய் வாழ் ★

# மூன்று சோம்பேறிகள்

அந்தக் கிராமத்தில் எதுப்பில் ஓடு, மடம். கூரைவேய்ந்தது. கோடையில் 'குளுகுளு' வென்று இருக்கும்.

நீண்ட நாட்களாக மூன்று சோம்பேறிகள் அந்த மடத்தை தங்கள் இருப்பிடமாக்கிக் கொண்டார்கள். மூவரும் சாதாரண சோம்பேறிகள் அல்லர்; அசல் வாழைப்பழச் சோம்பேறிகள், ஒருவருக்கொருவர் பேசக்கூட சோம்பல் படுவார்கள். குளிப்பு சவரம் ஒன்றுமே கிடையாது. ஊரே பரபரத்து ஓடியாடும் விதைப்புக்காலத்திலோ, அறுவடை நேரங்களிலோ கூட, ஏனென்று கேட்காமல் சோம்பல் சுகத்தில் மயங்கிக்கிடப்பார்கள். ஒரு நல்லது கெட்டதுக்குக்கூட எழுந்திருக்க மாட்டார்கள். இவர்களால் அந்த மடமே களையிழந்து அட்டதரித்திரம் பிடித்துப்போயிருந்தது. எனவே வேறு யாரும் எட்டிக் கூட பார்க்கவிரும்பவில்லை.

இம் மூன்று விருதா தெண்டச் சோற்றுத் தடியன்களின் சோம்பல் சுகவாழ்க்கை யாரோ ஒரு விடலைப் பிள்ளையின் மனசை உறுத்திவிட்டது போலும் நல்ல மத்தியான வெய்யிலில் அந்த மடத்துக்கு தீ வைத்து விட்டான்.

கூரைபற்றி எரிவதை ஒரு சோம்பேறி பார்த்துவிட்டான். தன் கூட்டாளிகளை, பதறிப் போய் தட்டி எழுப்பி.

"ஐயோ ... சோம்பல் மடம் வேகுதே..." எனக் கதறினன். எழுப்பப்பட்ட இருவரில் ஒருவன் மிகுந்த சோபத்தோடு எழுப்பினவனை பார்த்தான்.

''எனக்கு வாய் வலிக்கலே, சும்மா ... என்று அதட்டிவிட்டு இழந்த தூக்கத்தை மீட்டுக் கொள்ளவேண்டி முடக்கிப் படுத்தான்.

மூன்று மவனே இந்த கலவரத்தால் இடைஞ்சல்பட்டு தொந்தரவடைந்து துன்புற்றவன் போல் முகஞ்சளித்து பச்சர் ... என்று முணகிவிட்டு புரண்டுபடுத்து விட்டான் சில விஞடிகளில் கூரை முழுவதும் தீ பரவிவிட்டது. மூங்கில் வளைகள் படீர் ... படீர் என்று வெடித்துச்சிதறின. சிதறிய தீக்கொள்ளிகள் மூன்று சோம்பேறிகள் மீதும் தெறித்தன.

உடம்பில் தீக்கங்குகள் பட்டு சுட்டதும் துள்ளி எழுந்து ஓடினர்கள் மூவரும்

ஆனல்

கூரை முகடு இணைப்புவிட்டு முன்புறம் சரிந்து வாசலை அடைத்துக்கொண்டது. நாலா பக்கமும் நெருப்பு சூழ உள்ளே வசமாக அகப்பட்டுக் கொண்டார்கள் மூன்று சோம்பேறிகள்.

கூரை மூங்கில்களின் வெடிப்புச்சத்தம் நெருப்பின் சீறல் இவைகளையும் மீறிக்கிளம்பிய அந்தச் சோம்பேறிகளின் ஓலம். கொஞ்சம் கொஞ்சமாக ஓய்ந்து விட்டது.

சோம்பல் மடத்தோடு மூன்று சோம்பேறிகளின் கதையும் முடிந்து விட்டது.

தி. ராகினி

## விதவைகள் உதவித் திட்டம்

மட்டுவில் தெற்கில் பாதிக்கப்பட்ட பதினன்கு குடும்பங்களுக்கு அறவழிப் போராட்டக்குழு குசினிப்பாத்திரங்களை இம்மாத நடுபபகுதியில் வழங்கியது.

இக்குடும்பங்களின் எரிந்த வீடுகளையும், அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதிஉதவியுடன் குழு புனரமைத்துக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## த. வி. கூட்டணித்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் நடத்தியவர்கள்.

ஈழத்தமிழகத்தின் வரலாற்றிலே நீங்கா இடம்பெற்றவிட்டவர்களின் மறைவு இங்கு வெற்றி—த்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த தலைவர்களின் பிரிவினல் துயரத்திலாழ்ந்திருக்கும், குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.''



## சின்னஞ்சிறு பூமணிகளே



சின்னஞ்சிறுப் பூமணிகளே
உங்களுக்காக மலர்கிறது
சிறுவர் நோக்கு

சின்னமணிக் கைகளினல்
சிந்தையில் மலருகின்ற
பொன்னன கருத்துகளை
புதுமையுடன் படைத்திடுங்கள்

சிந்தையைத் தெளிய வைக்கும்
சீரான கட்டுரைகள்
தந்தை தாய் போற்றும்
தரமான பொன் மொழிகள்

கற்பனையில் தித்திக்கும்
கற்கண்டுக் கவிதைகள்
காந்திஜீ முன்மொழிந்த
கருணையின் தத்துவங்கள்.

எங்கே கண்மணிகாள்
எழுதுங்கள் எழுதுங்கள்
வண்ணச் சிறகடித்து—அறிவு
வானத்தில் பறந்திடுங்கள்
அறவழிச் சிறுவர் குழாம்
அவை போற்ற வளரட்டும்

ஆக்கங்கள்: எதிர்நோக்கும் அன்பு இராஜி அக்கா.

## உள் மனதின் காயங்கள் புலம்பு—

(6 ஆம் பக்கத்தொடர்ச்சி)

எப்படியோ பயங்கரமான தனிமை என்னை ஆட்கொண்டு விட்டது.

நினைவுகள் சித்திரவதை செய்கின்றன. உள் மனதின் காயங்கள் புலம்புகின்றன.

வறட்சியில் இருந்து மீளும் பயிர்களைப்போல், இந்தத் தனிமையிலிருந்து நான் மீளமாட்டேனே?

ஏன் மீளமாட்டேன்? யார் என்னை வெறுத்தார்கள்.

நான் தான் மற்றவர்களை வெறுத்தேன் துரத்தினேன்!

அவர்கள் வீடுதேடி நான் போனல் என்னை அரவணைக்க மாட்டார்களா என்ன?

எப்படிப்போவது? என்சுய மரியாதை இடம் தரவில்லையே!

ம்......சரி! காலந்தான் அந்தக் காயங்களை ஆற்றவேண்டும்.

அணு குண்டிலே அடிபட்டு விழுந்த ஜப்பானை, காலம் எழுப்பிட வில்லையா?

ஆணவத்தாலே அடிமைப்பட்ட ஜெர்மனிக்கு இன்று புதியதொரு வாழ்வு இல்லையா

காலத்தை விடச் சிறந்த மருத்துவன்யார்? இந்த மௌனமே கொஞ்சகாலம் நீடிக்கட்டும்,

ஆனல் என்னசெய்வேன்? உள்மனதின் காயங்கள் புலம்புகின்றன.

புலம்பட்டும்! புலம்பட்டும்!

புதிய காலம் என்னும் மருத்துவர், அந்தக் காயங்களை ஆற்றும் வரை, அவை புலம்பிக்கொண்டே இருக்கட்டும்.

கண்ணதாசன் கதம்பத்திலிருந்து
தருபவர் செல்வி ஜெலா இராசதுரை

▶ சிறுவர் கதை

# காகமும் குயிலும்

—உதயசூரியன்

ஒரு ஊரிலே ஒரு காகம் வசித்து வந்தது காகம் இயல்பிலேயே கறுப்பு நிறம் என்பதாலும், 'கா...கா...' என்ற அதனது குரலோசை அவலமாக இருப்பதாலும் சிலர் அதனை வெறுத்தனர், தமது வெறுப்பை மற்றவர்களிடமும் சொல்லி அவர்களையும் கட்டாயமாகக் காகத்தை வெறுக்கச் செய்தனர். இதனல் காகம் எங்கு சென்றாலும் அதனை எல்லோரும் கல்லால் எறிந்து துரத்தினர்.

தனக்கேற்பட்டுள்ள பரிதாபகரமான நிலையினையிட்டு மனம் வருந்திய காகம் நன்ருகச் சிந்தித்தது. அதன்படி தன்னை வெறுப்பவர்களிடமிருந்து ஒதுங்கி வாழ்வதென்றும், இனி எக்காரணம் கொண்டும் அவர்களது இல்லங்களுக்குச் செல்வதில்லை என்றும் உறுதியான முடிவெடுத்தது.

இவ்வாறு பிறருக்கு எவ்வித தீங்குமில்லாமல் தானும் தன்பாடுமாகக் காகம் வாழ்ந்து வருவதைக் கண்ட சிலர் காகத்தைப் புகழ்ந்து பேச ஆரம்பித்து விட்டார்கள்.

காகத்தைப் புகழ்வதைக் காண குயிலுக்குப் பிடிக்கவில்லை. அது காகத்துக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த விரும்பியது. உடனே அது காகத்தின் கூட்டுக்குச் சென்று '' காக்கா, காக்கா ஊரிலுள்ள எல்லோரும் இப்பொழுது உன்னைப் பெரிதும் விரும்புகிறர்கள்; இப்பொழுது நீ அங்கு செல்வாயானல் உனக்கு நல்ல வரவேற்புக் கிடைக்கும் என்றது. அதற்குக் காகம் "நீ சொல்வதை நம்ப முடியாது; எனது கறப்பு நிறத்தைக் கண்டாலே கல்லெடுத்து எறியத் துவங்கி விடுவார்கள்'' என்று கூறி மறுத்தது. அதைக் கேட்ட குயில் "நீ இன்னும் பழைய சம்பவத்தை மறக்கவில்லைப் போல இருக்கு இஞ்ச பார்! நீ கறுப்பென்ருல் நான் மட்டும் என்ன வெள்ளையா? நானும் கறுப்புத் தானே! நான் போய் மரத்திலிருந்து "கூ...கூ..." என்றதும், அவர்களும் ''கூ...கூ...'' என்கிறர்கள். நான் கறுப்பென்டதுக்காக என்னை அவர்கள் வெறுக்கவில்லை. நான் சொல்வதை நீ நம்பாது விட்டால், நாளைக் காலையில் போய் 'கா...கா...'' என்று சொல்லிப் பார் அவர்களும் உன் சங்கீத வார்த்தைகளைக் கேட்டு "கா...கா...'' என்று பாடத் தொடங்கிவிடுவார்கள் என்றது

குயில் சங்கீதம் என்றதும் காகத்திற்கு ஒரு நப்பாசை வந்து விட்டது.

மறு நாள் பொழுது புலரும் போதே காகம் ஒரு வீட்டின் முன்னுலுள்ள தேக்க மரத்திலிருந்து 'கா...கா...'' என்று பள்ளியெழுச்சி பாடத் தொடங்கியது. இது கேட்ட வீட்டுக்காரன் "சீ சனியன்; விடியக் காத்தால முழு வியளத்துக்கு வந்திட்டாய்; ஓடு மூதேசி என்று கல்லால் எறிந்து விரட்டினன். காகம் அவமானத்துடன் தனது கூட்டுக்குத் திரும்பியது.

அனுபவத்தில் கண்ட முடிவை ஒரு போதும் மாற்றிவிடாதே!

## வழி காட்டுவோம்

வீ. தர்மினி

கடந்த கால கணங்கள்
முடிந்து போன
பிணங்கள்
கூட்டைவிட்டுப்
பிரிந்த
பறவைகளை — நினைத்து
வாடுவது — ஏனே?
வாழ்ந்தவர்கள்
வாழ்ந்து,
போனவர்கள்
போக
இருப்பவர்கள்
வாழ
எங்கள்முன்
நிற்பவர்கள்
எதிர்காலச்
சிற்பிகள்
அறவாழ்வுக்
குழந்தைகள்
நம் நாட்டுச் சொத்துக்கள்
எம்
நாட்டுச்
சிற்பிகளை
வலுவான
வடத்தில்
வலிமையுடன்
பிணைத்து
வளமான
சமூகம்
கூட்டாக
வாழ
வழிகாட்டி
வைப்போம்!

★ முன்னல் வியர்வை சிந்தாவிடின் பின்னல் கண்ணீர் சிந்தவேண்டி வரும் ★

அறவழி
NONVIOLENCE

## நடிகமணி வைரமுத்து

# மறைவுக்கு அஞ்சலி

ஈழத்து தமிழ் நாடக உலகில் மின்னிக் கொண்டிருந்த நட்சத்திரம் ஒன்று மறைந்து விட்டது.

நடிப்புலக மாமேதை. பல்துறைக்கலைஞன், நடிகமணி என்றெல்லாம் கலையுலகம் போற்றிக் கௌரவித்த விலை மதிக்க முடியாத தமிழர்களின் கலைச்சொத்து கொழும்பு மாநகரிலே இறந்த செய்தி கேட்டு கலையுலகமே நிலைகுலைந்து போயிற்று.

நடிகமணி வீ. வீ. வைரமுத்து தனது ஆறாவது வயதிலே மேடையேறத் தொடங்கி அறுபத்தாறு வயது வரையும் நடித்தவர்.

தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக கொழும்பு சென்ற வேளையிலே திடீர் சுகயீன முற்று ஜூலை எட்டாம் திகதி காலமானார்.

கலைஞர் வைரமுத்து கலைக்குடும்ப மொன்றிலே அவதரித்தவர் அவரது பேரனார். தகப்பனார், மாமனார் அகிய மூவரும் தலை சிறந்த நாடகக் கலைஞர்கள் மட்டுமல்ல இசைத்துறையிலும் வல்லவர்கள்.

வைரமுத்துவை நினைத்துப் பார்க்கின்ற பொழுது அவர் நடித்த மயான காண்டமே எம் கண் முன் நிழலாடும். 'யாரடி கள்ளி நீ ......' என்று அவர் தனது குரலில் பாடி நடிக்கும் காட்சியை எளிதில் யாரும் மறந்து விட முடியாது.

'வசந்த கான சபா' என்னும் கலை மன்றம் ஒன்றை தன் சொந்த ஊரான காங்கேசன்துறையிலே அமைத்து அண்ணாவி மரபு நாடகம், அல்லது கொட்டகைக் கூத்து என்றழைக்கப்படும் நாடக மரபினை பே க்காத்து வந்தார்.

இவர் நடித்த 'மயான காண்டம்' இரண்டாயிரம் தடவை வரை மேடை ஏறியுள்ளது.

யாழ்ப்பாணக் கிராமங்களில் மட்டுமல்ல கொழும்பு போன்ற நகரங்களிலும் பல்கலைக்கழக மட்டத்திலும் கொட்டகைக் கூத்து நாடகத்தை மேடையேற்றி இலட்சக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்றவர் வைரமுத்து.

நாடகத்துடன் தொடர்புடைய எல்லாக்கலைகளையும் தெரிந்து வைத்திருக்கும் இவர் ஒரு பன்முகப்பட்ட கலைஞர் என்று கூடச் சொல்லலாம்.

இந்தியா சென்று முறையாக கர்நாடக சங்கீதம் கற்றவர். ஹார்மோனியத்தில் வித்துவானாகத்திகழ்ந்த இவர் வயலின், மிருதங்கம், மெஸ்ரலின், ஜலதரங்கம். புல்லாங்குழல் ஆகிய வாத்தியங்களையும் கையாளத் தெரிந்தவர்.

ஈழத்து தமிழ் நாடகத்தைப் பொறுத்தவரை வைரமுத்துவின் இடம் வெற்றிடமாக இருந்தாலும் அவர் பதித்து விட்டுச் சென்ற சுவடுகள் ஒரு போதும் அழிய ாட்டா.

அன்னாரின் பிரிவால் துயரிலாழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கும், நாடகக்கலைஞர்களுக்கும் புதிய சமுதாய வெளியீட்டகம் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது.

## அர்ஜாசயின் யோன்மாவிற்கு மனித உரிமைகள் பரிசு

பிலாந்தின் பிரபல்யமிக்க நடிகையும், பாடகரும், ஐக்கிய நாடுகளின் அகதிகள் பிரிவின் (Unher) நல் லெண்ணத் தூதுவருமாகிய அர்ஜா சயியோன்மா என்பவருக்கு, சர்வதேச மனித உரிமைகள் நிறுவனம் ஒன்று 1989-ம் ஆண்டுக்கான மனித உரிமைகள் பரிசை அண்மையில் வழங்கியுள்ளது.

வொக்ஸ் கியூமன் நிறுவனம எனும் இம் மனித உரிமைகள் சங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடனத்தில் காட்டப்பட்டிருக்கும் ஷ த்துக்களை கலாச்சார விளையாட்டுத்துறைகள் மூலம் பொதுமக்களுக்கு போதிய அறிவுகளை வழங்குபவர்களுக்கு இவ்வகை விருதுகளை வருடாந்தம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை புதிய சமுதாய வெளியீட்டகத்தால் யாழ்ப்பாணம் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989 ஆடி மாதம் அச்சேற்றி வெளியிடப் பட்டது.

# உலகில் முதலாவது பெண் பிஷப்

அங்கிலிக்கன் திருச்சபையின் முதலாவது பெண் பிஷப்பாக, அமெரிக்காவைச் சேர்ந்த பாபேரா ஹரிஸ்எனும் 58 வயதுடைய பெண்மணி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி உலகில் முதலாவது பெண் பிஷப்பாக இவர் திகழ்கின்றார்.

அமெரிக்காவில் அண்மையில் இடம் பெற்ற அங்கிலிக்கன் திருச்சபையின் கூட்டத்தில் இவரின் தெரிவு இடம் பெற்றது. சுமார் 8500 பிரதிநிதிகள் பங்குகொண்ட கூட்டத்தில் பாபேரா ஹரிஸ் ஏகமனதாகப் பிஷப்பாகத் தெரிவாகினார்.

அங்கிலிக்கன் திருச்சபையில், அமெரிக்காவைத் தவிர, பிரேசில், கியூபா, ஹொங்கொங், உகண்டா, கெலயர், கனடா, நியூசிலாந்து போன்ற நாடுகளிலும் பெண்கள் மத குருமார்களாகச் சேவையாற்றி வருகின்றனர்

அடுத்துவரும் இரண்டு ஆண்டு காலத்தில் இந்நாடுகளிலும் பெண்கள் பிஷப்பாகத் தெரிவு செய்யப்படக்கூடிய வாய்ப்புகள் உருவாகலாம் என அங்கிலிக்கன் திருச்சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேசமயம் பாபேர ஹரிஸ் பெண் பிஷப்பாகத் தெரிவு செய்யப்படடமையைத் தங்களால் ஏற்கமுடியாது எனச் சில பிஷபமார்கள் அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

* * *

# கொரிய காந்தி மரணம்

தென்கொரியாவில் அறவழியைப் பரப்பி வந்த 'ஹாம் மாஸ்டர்'' என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டு வந்தவரும், சர்வதேசிய மட்டத்தில் ''கொரிய காநதி'' எனப் பிரபல்யம் பெற்றவருமான, 88 வயதுடைய திரு. ஹாம் சொக்கொன் என்பவர் சில தினங்களுக்கு முன்னர் தென்கொரியாவின் தலைநகராகிய சியோலில் மரணமானார்.

மனித உரிமைகள் பாதுகாப்பு விடயத்திலும், இரு கொரியா தேசங்களையும் இணைத்தல் விடயத்தில் 'ஹாம் மாஸ்டர்' இறுதிவரை பணியாற்றி வந்தார்.

''ஒரு சிறு பையன் ஒரு பந்தை எவ்விதம் தான் விரும்பும் திசைக்கு அடிப்பானோ அதே போன்று, ஆண்டவனால் விரும்பும் வண்ணம் உதைக்கப்பட்ட மனிதன் தான்'' என அவர் கூறுவதுண்டு

பல தடவைகள் அவர் அதிகார வர்க்கத்தினால் சிறை வைக்கப்பட்டார். இது குறித்து. அவர் ஒரு முறை கூறுகையில் 'சிறைச்சாலை எனும் பல்கலைக்கழகத்தின் ஒரு பட்டதாரிதான்'' என்றார்.

''ஹாம் மாஸ்டர் உடலால் எம்மை விட்டுப்பிரிந்து விட்டாராயினும், உள்ளத்தாலும், சேவையாலும் அவர் இன்னும் எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்' என கொரிய மக்கள் தெரிவித்துள்ளனர்.

## வேண்டுகோள்

கைதடி வயோதிபா ல்லதில் தொண்டராக பணிபுரிய விரும்புபவர்கள் இல்லப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

அத்துடன் இல்ல வளர்ச்சிக்கு உதவ விரும்பும் பொது நிறுவனங்கள் தமது நிலையத்திற்கு ஜெனரேட்டர் ஒன்று அன்பளிப்பு செய்யுமாறு இல்லப் பொறுப்பாளர் திரு. ரி பாலதேவ ேட்டுள்ளார்

அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்படும் பாலர் பாடசாலை அமைந்துள்ள பகுதிகளில் சிறுவர் நூலகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஐந்துசிறுவர் நூலகங்கள் முதலில் ஆரம்பிக்கப்படவுள்ளன

இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறவழிக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## தலைவருக்கு பாராட்டு

கைதடி சரஸ்வதி சனசமூக நிலைய கலையரங்கத் திறப்பு விழா விரைவில் நடைபெற உள்ளது.

இக் கட்டிட வேலைகள் முடியும் தறுவாயில் இருக்கின்றது.

இப் பணிக்காக அயராது உழைத்துவரும் நிலையத் தலைவர் சு. பார்த்திபனுக்கு இங்குள்ள பலர் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

## ஆண்டு விழா

கைதடி வத்தி வளர்மதி சன சமூக நிலையத்தின் முப்பதாவது ஆண்டுவிழா நிலையத் தலைவர் பொன் கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

இவ் ஆண்டுவிழாவை வடமாகாண ரீதியிலான கரபந்தாட்டப் போட்டி. விதவைகளுக்கான மறுவாழ்வுத்திட்டம், நிலைய ஸ்தாபகர் கௌரவிப்பு, இல்ல விளையாட்டுப் போட்டி போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது

### பத்திரிகையாளன்

இன்றில் காலூன்றி
நாளையை தொடுபவன்
அவன்
நிகழ்காலத்தின்
நிமிஷமாயிருப்பவன்
அவன் நினைத்தால்
புழுக்களின் உடம்பில்
புலியின் இரத்தத்தை
புகுத்த முடியும்.
இலையுதிர்காலத்து
இலைகளின்
ஆயுளைக்கூட அவன்
அதிகரிக்கமுடியும்.
பத்திரிகையாளன்
அட்சய
பாத்திரத்திற்காய்
உண்ணாவிரதமிருப்பவன்.

—வைரமுத்து

### இந்த நாள் இனிய நாள்

இனிமைக்கரங்கள்
இன்றைய வைகறையைத்
திறக்கட்டும்.
நட்பு நறுமலர் தூவி
இந்த
நாளைத்தொடங்குங்கள்
நாள் முழுதும் அதையே
தொடருங்கள்.
நேர்வருவோர்க்கெல்லாம்
நீங்கள்
ஆன்மாவில் ஓர் அன்பு
எண்ணம்
நெஞ்சகத்தில் ஒரு
நேயப்பாடல்
நினைவில் ஒரு கனிவு
மொழி
ஏந்துங்கள்
நீங்களும் அவர்களிடம்
''பொலிக இந்நாளெனும்
வாழ்த்தைப் பதிலாய்ப்''
பெறுவீர்கள்.

## அறவழியில் பிரசுரிப்பதற்கு...

அறவழிப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு கவிதைகள், கட்டுரைகள் மற்றும் விடயதானங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

விடயதானங்கள் அனுப்புபவர்கள் ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதிக்கு முன்னதாக எமக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

★ உண்மை பேசி உத்தமனாக வாழ் ★